பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 20 சனிக்கிழமை (02-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 156

# மக்களின் உறுதியை, உணர்வை பிரதிபலித்திட்ட மேதினப் பேரணி

## நீர்கொழும்பில் தமிழ் இளைஞரின் சடலம்

கொழும்பு, மே 2

நீர்கொழும்பு அலஸ் வீதியில் தமிழ் இளைஞர் ஒருவரின் சடலத்தை நீர்கொழும்பு பொலீஸார் கண்டுபிடித்தனர்.

பிரஸ்தாப இளைஞரின் காற்சட்டை பையிலிருந்து இரண்டு 'சயனைட்' வில்லைகளும் கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

## முஸ்லிம் கிராமத்திலிருந்து 57 இராணுவத்தினரை காணவில்லையாம்!

கொழும்பு, மே 2

பொலனறுவ மாவட்டத்தில் தாக்குதல்கள் இடம்பெற்ற கிராமங்களில் மேலும் பலரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

தாக்குதல் இடம்பெற்ற முஸ்லிம் கிராமமான அலும்புப் பொத்தான என்னும் இடத்தில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த 57 'பரா' இராணுவத்தினரைக் காணவில்லை என்றும்—

தாக்குதல் நடந்த சமயம் அவர்கள் பயந்து காடுகளுக்குள் ஓடி ஒளிந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை — முஸ்லிம்களினால் கொல்லப்பட்ட தமிழரின் எண்ணிக்கை குறைந்தது 61 ஆக இருக்கும் என்று உறுதி செய்யப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம்கள் மீண்டும் தம் மீது இன்னொரு தாக்குதலை நடத்தலாம் என்று அஞ்சி காடுகளுக்குத் தப்பிச்சென்ற தமிழ் மக்கள் இன்னும் காடுகளுக்குள்ளேயே ஒளிந்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-எ]

## மாதகல் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 2

பலாலி முகாமில் இருந்து மாதகல் துறைமுகப் பகுதியை நோக்கி நேற்றுமுற்பகல் 11 மணியில் இருந்து 12 மணி வரை ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவத்தில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பெயர் விவரம் தெரியவரவில்லை. துறைமுகப் பகுதியில் ஒரு கோவிலும், சில வீடுகளும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சீ-பிளேன் ஒன்று அப்பகுதியை நோக்கி சில தடவைகள் வட்டமிட்டுச் சென்றதை அடுத்து பலாலியில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும்—

சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் வந்த சீ-பிளேன் அப்பகுதியை வட்டமிட்டது என்றும்—

அது திரும்பிச் சென்ற சிறிது நேரத்தில் மீண்டும் அப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டமாக இருந்த மக்கள் சிதறி ஓடித் தப்பிக் கொண்டனர்.

துறைமுகப் பகுதியிலுள்ள முருகமூர்த்தி கோவிலே சேதமடைந்ததாகத் தெரிய வந்தது. [ஒ-15]

## நல்லூரில் தமிழிசை விழா இன்று கோலாகல ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 2

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும் ''தமிழிசை விழா'' இன்று நல்லூரில் கோலாகலமாக ஆரம்பமாகிறது.

நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் எழிலார்ந்த கலை அரங்கில் இன்று மாலை 5 மணிக்கு மங்கள இசை முழக்கத்துடனும், தமிழ் வாழ்த்துப் பாடலுடனும் விழா நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

விழாவுக்காக அமைக்கப்பட்டிருக்கும் அழகான அரங்கமும், வீதியெங்கும் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகளும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன.

இன்று தொடக்கம் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை — ஐந்து நாட்கள் தினசரி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## எழுச்சி பொங்கிட நிகழ்ந்தது

யாழ்ப்பாணம், மே 2

தமிழ்ப் பெருமக்களின் விடுதலை வேட்கையையும், போராட்ட உணர்வையும் பிரதிபலிக்கும் விதத்திலும்—

அரசு எத்தனை அநியாயங்கள், அடக்குமுறைகள், அக்கிரமங்களைச் செய்தாலும் தமிழர்களின் மன உறுதியைக் குலைக்க முடியாதென எடுத்தியம்பும் விதத்திலும் —

நேற்றைய மே தினப் பேரணி அமைந்திருந்தது.

பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்கள் ஒரே அணியில் திரண்டு எழுச்சிப் பேரணியை நடத்தினர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், அடக்குமுறைகளையும், மக்களின் உணர்வுகளையும் சித்திரிக்கும் ஊர்திகள் பேரணியில் முக்கிய இடம் வகித்தன. பொம்மலாட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களின் எழுச்சி பிரதிபலிக்கப்பட்டது.

பேரணியில் கலந்து

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்குப் புதிய பரிமாணம்

### மேதினம் குறித்து பாலகுமாரன்

யாழ்ப்பாணம், மே 2

எப்படியாவது அரசைக் காப்பாற்ற வேண்டும் என்று பிரேமதாஸாவும், எவ்வாறேனும் அரசைப் பிடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளும் போட்டி போட்டு கொழும்பில் மேதினம் கொண்டாடுகின்றன.

தமிழீழத்தில் நடக்கும் மேதினம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக புதிய பரிமாணத்தை உருவாக்கும் வகையில் அமைகிறது

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடந்த பிரமாண்டமான மேதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பாலகுமாரன் மேலும் கூறியதாவது:-

ஒருகாலத்தில் இங்கு நடந்த மேதினக் கூட்டங்களில் தமிழ் - சிங்கள தொழிலாளர்கள் இணைந்து போராட்டம் நடத்தினால்தான் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று குரல் எழுப்பப்பட்டது. ஆனால் தொடர்ந்து வந்த இனக்கலவரங்கள் அதற்கு முற்றுப் புள்ளி வைத்தன.

இன்று தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வெற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரிப் பகுதியிலும் நேற்று எழுச்சிப் பேரணி

மன்னார் மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்திலும் நேற்று மேதின எழுச்சிப் பேரணியும், கூட்டமும் நடைபெற்றன.

சாமிப்புலத்தில் ஆரம்பமான எழுச்சிப் பேரணி நல்லூர் அரசினர் பாடசாலையில் முடிவடைந்தது பேரணியில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களின் நிலையைச் சித்திரிக்கும் ஊர்திகளும் இராணுவத்தின் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளைச் சித்திரிக்கும் ஊர்திகளும் இடம்பெற்றன.

பேரணியின் இறுதியில் இடம்பெற்ற எழுச்சிக் கூட்டத்திற்கு திரு. பொன் தில்லைநாதன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பூநகரி, முழங்காவில் பிரதேச மக்களுறவு, கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. மதன்ராஜ் உட்படப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பெருந்திரளான மக்கள் பேரணியில் கலந்து கொண்டு ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான கோஷங்களை முழங்கினார்கள். [ஓ-த]

## மயங்கிய ஐவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மே 2

மே தின ஊர்வலத்தின் போது மயங்கி விழுந்த 5 பேர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மே தின சேவையில் ஈடுபட்டிருந்த அம்புலன்ஸ் மூலம் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த வி. தயாபரன் [வயது 22], நுணாவில் மேற்கைச் சேர்ந்த என். சுசி [வயது 18] அரியாலையைச் சேர்ந்த ஜே. பிரான்ஸிஸ்கா [வயது 38] எம். விறிசிற்றம்மா [வயது 46] கொழும்புத்துறையைச் சேர்ந்த த. உதயன் [வயது 20] ஆகியோரே அந்த ஐவரும் ஆவர். [ஒ-15]

## எஞ்சிய எதிரிகளும் விடுதலை

பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸைக் கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எஞ்சிய மூன்று எதிரிகளையும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. உனம்புவ விடுதலை செய்து தீர்ப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று ஒலித்த கோஷங்கள்

யாழ்ப்பாணம், மே. 2

நேற்றைய மேதினப்பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்கள், ஏந்திச் செல்லப்பட்ட சுலோகங்கள் வருமாறு:

★ உலக தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்று சேருவீர்!

★ வான் படைகள் வானில் வட்டமிட்டு வன்னை மழை பொழியும் எம் மீது குண்டுகளை; ஆனாலும் வழங்கிடுவோம் எம் பணியை!

★ சிறீலங்காவின் தடைகள் பல ஆனாலும் தடை தளர நாம் திரள்வோம் ஓரணியாய்!

★ பட்டினிச் சாவைத்தர அவன் பாவி பார்க்கின்றான்: ஆனாலும் எமது உயிர் பிரியாது விடிவின்றி!

★ தென் தமிழீழ மாணவர் படுகொலை; வடக்கில் மாணவர் குரல்வளை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்புலிகள் அணி விஸ்தரிக்கப்படும்

### மே தின விழாவில் தகவல்

யாழ்ப்பாணம், மே 2

''ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளை கடற்பிரதேசத்தில் எவ்வளவுக்குக் கட்டுப்படுத்துகிறோமோ, அந்தளவு விரைவில் எமது பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும்.

அதனைக் கருத்திற்கொண்டு கடற்புலிகள் அணியை விஸ்தரித்து விரிவுபடுத்த தலைவர் பிரபாகரன் அக்கறை காட்டியுள்ளார்.''

— இப்படிக் கூறினார் விடு

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைப்பந்தி ஸ்ரீ சிவகுருநாத சுவாமி தேவஸ்தான
வருடாந்த
அலங்கார உற்சவம்

இன்று [02-05-1992] மாலை 3-30 க்கு ஆரம்பமாகி 16 5-92 இல் சங்காபிஷேகத்துடன் முடிவடையும்.

தர்மகர்த்தா.
பா. சண்முகராசகுருக்கள்.
ஆனைப்பந்தி. [20803]

சகல விதமான அச்சுவேலைகளையும்
கவர்ச்சிகரமாக செய்வதற்கு

நாடுங்கள்

உதயன்

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி/2242]

★ தாவரவியல் ★

திரு. V. S. குணசீலன் B. Sc.

புதிய பகுதிகள் ஆரம்பம்:

93 A/L 9-00—10-00
தாழ்வகைத் தாவரங்கள்
94 A/L பிரிவு I 10-00 -11 00
உருவவியல்
பிரிவு II 11 00-12-00
உருவவியல்
பிரிவு III 12-00-1-00
அடிப்படை அலகு

NEW SCIENCE ACADEMY
JAFFNA. [சி/2250]

சுகாதார சேவைகள் திணைக்களம்

கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதி, இலக்கம் 57 இல் இயங்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக் கட்டடத்தின் பின்பகுதி ஓட்டுக் கூரையின் கீழ் பாய்த்தட்டி அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்க விரும்புவோர் மேலும் விவரங்களுக்கு உடனடியாக இப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

1992 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதிக்கு முன் கேள்விப் பத்திரங்களை ஒரு பிரதிகளில் தயாரித்து இப் பணிமனையில் சமர்ப்பிக்க வேண்டும்.

— சு. சே. பி. பணிப்பாளர்.
30 04-92. (சி-1967)

## நோயாளரை பார்வையிட கட்டணம்!

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று நோயாளர்களை பார்வையிடுபவர்களிடம் கட்டணம் அறவிடுவதற்கான வழிவகைகளை தமிழ்நாடு அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

பார்வையாளர்களிடம் கட்டணம் அறவிடுவதற்கான மாநில அரசின் தீர்மானம் சட்டசபையில் சுகாதார அமைச்சர் எஸ். முத்துச்சாமியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையாளர்களிடம் ஒரு ரூபா கட்டணம் அறவிடப்படவிருக்கிறது. [இ-3]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

A/L விஞ்ஞானம்

★ CHEMISTRY
திரு. மகாதேவா
திரு. சிவசோதி
★ PHYSICS
திரு. விமல்ராஜ்
திரு. சுந்தரலிங்கம்
★ PURE & APPLIED
திரு. தவராட்ணசிங்கம்
★ ZOOLOGY
திரு. செல்வாதரன்
★ BOTANY
திரு. சதீஸ்

BOND INSTITUTES
யாழ்ப்பாணம். [4821]

## இடதுசாரித் தலைவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, மே 2

இடதுசாரிக் கட்சிகளின் தலைமைத்துவப் பதவிகளில் இருப்பவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்திருப்பதாக லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியன குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பாக மூன்று கட்சிகளின் பொதுச் செயலாளர்களான திரு பெர்னாட் திலகரத்னா, திரு கே. பி. சில்வா, திரு வை. பி. சில்வா ஆகியோர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைவரத்தில் திட்டமிட்ட படுகொலைக்கான சாத்தியக் கூறு கிடைத்த தகவல்களிலிருந்து வெளியாகியுள்ளது. இப்படுகொலைத் திட்டம் ஏனைய அரசியல் கட்சிகளையும் அச்சுறுத்துவதாக உள்ளது. இந்த அபாயம் பற்றி நுணுக்கமாக நாம் பரிசீலனை செய்தோம். அதனைத் தொடர்ந்தே இந்த அச்சுறுத்தல் படுகொலைத் திட்டம் பற்றி கிடைத்த தகவல்களைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவது எனத் தீர்மானித்தோம்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதே சமயம் இப்படுகொலைப் பயமுறுத்தல்பற்றி சம்பந்தப்பட்ட கட்சிகள் முறையான முறைப்பாடென எதனையும் பாதுகாப்பு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறினார். [இ-எ]

## வவுனியா பெண்ணுக்கு 7 வருட சிறை

கொழும்பு, மே 2

ஹெரோயின் வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட —

வவுனியாவைச் சேர்ந்த — குடும்பமாது ஒருவருக்கு 7 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த அப்துல் வஹாப் ஆயிசா உம்மா என்ற மாணிக்கம் மங்கையர்க்கரசி என்ற குடும்பமாது 1990 மே மாதம் ஒரு கிலோ ஹெரோயின் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. உனம்புவ மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார். (இ-3)

## பிரச்சினைக்கு எந்த வழியிலாவது தீர்வு ஒன்றைக் காணவேண்டும்

### ஜனாதிபதி கூறுகிறார்

'வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு எந்த வழியிலாவது தீர்வு காண்போம்.''

இப்படிக் கூறினார் ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸா. கஹட்டபிட்டியவில் நடந்த வைபவம் ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:-

எமது அரசாங்கம் வடக்கு- கிழக்கு பிரச்சினையை தீர்க்க தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இன்று நாடாளுமன்ற தெரிவுக்குழு வடக்கு— கிழக்குப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து வருகிறது. அக்குழுவுக்கு பௌத்த பிக்குகளின் ஆசீர்வாதமும் கிடைத்திருக்கிறது. மொழிப் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுவிட்டது. திறமைக்கேற்ப விகிதாசார அடிப்படையில் தொழில் பிரச்சினையும் தீர்க்கப்பட்டு வருகிறது. அதிகாரப் பரவலாக்கல் முறை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது பௌத்த குருமாரும் ஏனைய சமய குருமார்களும் வடக்கே சென்று நிலைமைகளை ஆராய்ந்து வரத் தொடங்கியுள்ளனர்.

இப்படி ஜனாதிபதி கூறினார். [இ-3]

PHYSICS
திரு: விமல்ராஜ்
சனி — ஞாயிறு
10-00 BASIC
11-00 சடப் பொருளியல்
12 00 PAPER CLASS
01-00 LIGHT
02-00 ELECTRICITY
ஆரம்பம்:
03-05-1992
BOND Institutes,
யாழ்ப்பாணம். [4819]

பாரதிதாசன்
★ கல்வி நிறுவனம் ★
(BECON)

A/L 92 DAY CLASSES

பொருளியல்: வரதராஜன்
12 — 1 இலங்கைப் பொருளாதாரம்
1 — 2 வினா - விடை பிரிவு I
2 — 3 வினா - விடை பிரிவு II

கணக்கியல்: சௌந்தி
8 — 9 கம்பனி
9 — 10 நிலையான சொத்து விற்பனை
2 — 3 பங்குடமை

வர்த்தகம்: பசில்
10 — 11 } மூலதனச் சந்தை
11 — 12 }

குறிப்பு:
மேலே குறிப்பிட்ட பகுதிகள் அனைத்துக்கும் ஒரே கட்டணமே அறவிடப்படும்.

ஆரம்பம்: 05-05-1992
செவ்வாய் 8-00 a.m.
[சி-2247]

### அமெரிக்க நகரங்களில்

## கறுப்பர் - வெள்ளையர் கலவரம் பரவுகிறது

வாஷிங்டன், மே 2

அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) ஆரம்பித்த நிற வேற்றுமைக் கலவரம் சான்பிரான்ஸிஸ்கோ நகருக்கு பரவியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இரு நகரங்களும் இரவு நேர ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இரு தினங்களாக லொஸ் ஏஞ்சலஸ் நகரில் இடம்பெற்ற கலவரங்களில் குறைந்தது 20 பேர் வரை உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது. கொள்ளையிடல் மற்றும் தீவைத்தல் சம்பவங்கள் காரணமாக சொத்துகளுக்கு பத்துக்கோடி டொலர்களுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கறுப்பு இனத்தவரான ஒருவரைத் தாக்கிய வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு வெள்ளை நிறத்தவர்களான பொலீஸ் அதிகாரிகளை நீதிமன்றம் ஒன்று விடுதலை செய்ததைத் தொடர்ந்தே இக்கலவரம் ஆரம்பமானது.

கறுப்பு இனத்தவரை அப் பொலீஸ் அதிகாரிகள் மிருகத்தனமான முறையில் தாக்கியதைக் காட்டும் வீடியோ படத்தைப் பார்த்த பின்னரும் ஜூரர்கள் எதிரிகளைக் குற்றவாளிகள் அல்லர் என்று தீர்ப்பளித்திருந்தனர்.

இது கறுப்பு இன மக்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதேவேளை — விடுதலை செய்யப்பட்ட வெள்ளை இன பொலீஸ் அதிகாரிகள் மீது குடியுரிமைகளை மீறியதாக, புதிதாக வழக்குத் தாக்கல் செய்வது குறித்து சமஷ்டி அதிகாரிகள் பரிசீலனை செய்து வருகின்றனர் என ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு ஏற்படுத்திய விரக்தியும், வேதனையுமே வன்செயல்களுக்குக் காரணம் என்றும் திரு. புஷ் சொன்னார்.

இதற்கிடையில் — நாட்டில் ஏற்பட்டுள்ள கறுப்பு — வெள்ளை இனத்தவர்களுக்கு இடையேயான பதற்றம் குறித்து கறுப்பினத் தலைவர்களுடன் பேச்சுகள் நடத்துவதற்கு ஜனாதிபதி புஷ் தீர்மானித்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள பதற்றநிலை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தலைவர்களுக்கு பலத்த சவாலாக அமையக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது [இ-எ].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 ஆவது
# பிறந்த தின வாழ்த்து



**★ செல்வரத்தினம் செந்தூரன் ★**

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, சிவன் கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம்-பொன்னம்மா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செந்தூரன் தனது 13 ஆவது பிறந்த தினத்தை இன்று (02-05-1992) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, ஆசையப்பா, ஆசையம்மா, பெரியப்பாமார், அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தான்மார், அக்காமார், அண்ணன்மார், அண்ணி, தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

[20795]

---

# மொடேண் எடியுக்கேசன் சென்ரர்
கரவெட்டி.

**DAY CLASS** பகல் நேர வகுப்பு

வினா - விடை முறையில் மீட்டல் வகுப்பு
(Paper Class)

அலகு ரீதியாக நடைபெறும்.

Chemistry — திரு. சண்முகசுந்தரம்
Maths — திரு. வேலாயுதம்
Physics — திரு. கணேஸ்

**ஆரம்பம்: 05-05-1992**
நேரம்: 10-30 காலை

[சி/1961] — நிர்வாகி.

---

# விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

# O/L DAY CLASSES
(காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை)

**பிரிவு — 5**

**ஆரம்பம்: 07 - 05 - 1992**


★ எமது தனித்துவம் வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு.
★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றிற்கு இரண்டு மணி நேரம் நடைபெறும்.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-1968]

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

வீரப்பிறப்பு: 11 — 04 — 1966



வீரச்சாவு: 19 — 03 — 1992

## லெப்டினன்ட் சிவராஜ்
(மோகனலிங்கம் மோகனதாஸ்)

தென் ஈழம் பிறந்து
வட ஈழம் வளர்ந்து - சிறப்புப்
புலி அணியில் கலந்து
பல சமரில் சிறந்து
பகை பலவும் வென்றாய் - இன்று நீ
மணலாறு மண் மீட்பில்
வரலாறு படைத்து விட்டு
தமிழீழ மண்ணோடு
மாவீரன் ஆனாயே!

எமது அன்பு மகனின் வீரச்சாவுச் செய்திகேட்டு எமக்கு ஆறுதல் கூறியவர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், உடனின்று உதவிய விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகள். மணலாற்றில் இவரோடு வீரச்சாவு அடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள். அத்துடன் இன்று [02-05-92] எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

சண்ணன் வீதி,
இத்தாவில், பளை.

[20814]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
## பரமநாதர் சண்முகலிங்கம்
(இளைப்பாறிய உதவி நிதியாளர்,
யாழ். கல்வித் திணைக்களம்)

தோற்றம்: **16 — 01 — 1932**
மறைவு: **02 — 04 — 1992**

திங்களொன்று கழிந்ததையா தெய்வக் கோயில்
திருவிளக்கே சுடரொளிதான் மறைந்ததெங்கே?
தங்கமுகம் அணையாத அன்பில் வார்த்த
தவக்கோலம் கருணை மொழி எங்கே எங்கே?
எங்களுயிர்த் தவம் போன வழியைப் பார்த்தே
ஏங்கிமனம் துடிதுடித்தே கலங்குகின்றோம்
பொங்கு துயர்க் கனல் தணிப்பீர் பெருமான் வீட்டில்
பூரணப் பேரின்ப சுகம் சுகித்தே வாழ்க.

எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு, உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


— குடும்பத்தினர்.

70, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

[20804]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு
## சின்னத்துரை செல்வநாயகம்
[M. B. E; P. J. K; F R G. S.. -
ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி, மலேசியா]

தோற்றம்: **19 - 12 - 1900**
மறைவு: **14 - 05 - 1991**

**திதி: 02 — 05 — 1992**

'நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு'
நாம் நீளநினைந்திருக்கும் தங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள் மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

'ஸ்ரீ சைலம்',
151 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[20775]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 06 — 1934
மறைவு: 03 — 04 — 1992

பேராசிரியர்
## சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்
[பல்கலைக்கழகம், பேராதனை]

தாவரவியற் பகுதிக்கோர்
தரமான பேராசிரியனாய்
பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
பெருமையுடன் பணி செய்து புகழ்பெற்றீர்!
தாய் நாட்டிற்காக தாழ்விலாத
ஆராய்ச்சிகள் பல செய்து
சாதனைகள் பல படைத்தீர்!
அன்புடன் அறநெறியில்
வாழ்ந்து நின்ற நவக்கிரி தந்த நல் அறிஞரே!
நீண்ட தூரம் எமைப் பிரிந்து சென்ற போதும்
நீங்காது உம் நினைவு வாழும் நாளும்.

உமது பிரிவால் துயருறும்;
மனைவி, சகோதரிமார், மாமி,
மைத்துனர், மைத்துனிமார்
மற்றும் உறவினர்கள்.

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.

[20760]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C. R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா பத்தக சாலை, இல 8, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம், அரஸ் புத்தக நிலையம், இல 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [20681]

பாவித்த நல்ல நிலையில் உள்ள கதவுகள், யன்னல்கள் (முதிரை, வேம்பு) விற்பனைக்குண்டு. அளவு 6 அடி x 18 அங். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, ந. கேதாரன், இல. 10, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம். [20796]

நாற்பது நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டவை. தொடர்பு S. சுப்பிரமணியம், Brown வீதி, கொக்குவில் கிழக்கு, (ஸ்ரேஷனுக்கு முன்பாக). [4810]

### மணமகள் தேவை

பிரான்சில் தொழில் புரியும், வடமராட்சியைச் சேர்ந்த, 33 வயதுடைய, நல்ல ஒழுக்கமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே தகைமையில் மணமகள் தேவை. திருமணத்தைத் தீர்மானிக்கச் சீதனம் தடையாகாது. திருமணம் இங்கு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். இல. 839, C/o உதயன், யாழ்ப்பாணம். [தி-2231]

### இலவசம்

துர்க்கா, ஜெயந்தி பத்திகளின் வெற்றுப் பைக்கட்டுகளை எமது கிளைகளிலோ அல்லது எமது விற்பனைப் பிரதிநிதிகளிடமோ கொடுத்து அதற்குரிய இலவசப் பொருள்களை பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். [சி-2241]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [4813]

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26 - 4 - 92 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் விசேட கழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். [4812]

### ஆங்கிலப் பயிற்சி

ஆங்கிலம் பேசுவதற்கும், பரீட்சைகள் எழுதுவதற்கும் English Grammar, Spoken English இங்கிலாந்து முறையில் கற்பிக்கப்படுகிறது. V.N. கந்தசாமி, A. I. B. Part I [London], Inter [London] 87, திருநெல்வேலி றோட், [பாலத்திற்கு அண்மையில்] கொக்குவில். [20813]

### அம்பாள் திருமண சேவை

31 வயது Lecturer, 27 வயது Lecturer சைவம், 33 வயது Lecturer சைவம், 28 வயது Doctor ஆகிய மணப்பெண்களுக்கு மணமக்கள் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் வீதி, நல்லூர். [20808]

### இலவச திருமண சேவை

29 வயது, அனுஷம், செவ்வாய் 12, ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. விவாகம் இலங்கையில் நடைபெறும். தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4804]

### மணமகன் தேவை

சதயம் M.Sc., Engineer 31 Surveyor 33 மணமகன்களுக்கும், அவிட்டம் ஆசிரியை 32 மணமகளுக்கும் குறிப்புகளுண்டு. தொடர்பு அ. பாலகிருஷ்ணன், 6, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [20746]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண செவ்வாய்க் குற்றமுள்ள (கிரகபாவம் 25), படித்த, 40 வயது மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். நட்சத்திரம்: விசாகம் 1. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20764]

யாழ்ப்பாண இந்து, 4இல் செவ்வாய், வங்கியில் வேலை செய்யும் 34 வயதான மணப்பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். நட்சத்திரம்: பூராடம், மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20765]

---

**CHEMISTRY**
**புதிய பிரிவுகள்**

திரு. சிவசோதி B. Sc.

ஆரம்பம்:
03 — 05 — 1992

சனி — ஞாயிறு
7-00 — Physical
9-00 — Organic

பிரிவு I
1-00 — Paper Class

செவ்வாய் — வியாழன்
பிரிவு II
2-30 — Paper Class

★ A/L 91 பிரிவு மாணவர்களுக்கு கடந்த 10வருட வினாத்தாள்களை முழுமையாக முறைப்படி கற்பித்து மாணவர்களின் பாராட்டைப் பெரிதும் பெற்றவர்.

**BOND**
*Institutes,*
யாழ்ப்பாணம். [4818]

---

## தேவை

இணுவிலில் இயங்கி வரும் ஆடைகள் உற்பத்திசெய்யும்தொழிற் சாலைக்கு துணி வெட்டுபவர் (பெண் - கட்டர்) தேவை.

பெண்களின், சிறுவர்களின் நவீன ஆடைகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவராகவும், தையற்காரராகவும் இருத்தல் வேண்டும்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-05-92 இற்கு முன் விண்ணப்பிக்கவும். C/o 402, நாவலர் வீதி, உதயன். [20780]

---

## திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான ஆங்கிரச ஆண்டு சித்திரை மீ 24 ஆம் திகதி [06-05-1992] புதன்கிழமை மு.ப 10 மணி முதல் 11 மணி 45 நிமி. வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்,

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| [illegible] (M.B.B.S) | [illegible] (B.A) |
| அவர்கட்கு | அவர்களை |
| [இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S] | [ஆசிரியர், அளவெட்டி சினன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை] |

திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள், தங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதராய் வந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. கு.செல்வத்துரை, தம்பதிகள்
[சித்தாயுள்வேத வைத்தியர்]
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

திரு. சி.கதிர்காமத்தம்பி, தம்பதிகள்
[இளைப்பாறிய இ.போ. சபை, உத்தியோகத்தர்],
கொல்லங்கலட்டி.

[வைபவம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.]
[20753]

---

## அறிவித்தல்

கொக்குவில் - நந்தாவில்
**கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை**

அன்புடையீர்!

1943 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ஆம் திகதி எழுதப்பட்ட 194 ஆம் இலக்க உறுதியின்படி 10-3-91 ஞாயிற்றுக்கிழமை பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு 15 பேர் கொண்ட உத்தேசக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. மேற்படி குழுவிடம் குறுகிய காலத்தில் யாப்பொன்றைத் தயாரித்து அங்கத்தவர்கள் கொண்ட பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெற வேண்டும் என்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆகவே இப் பொதுக் கூட்டம் 23-5-92 சனிக்கிழமை பி. ப. 2-30 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெற உள்ளது.

யாப்பு அங்கீகரிக்கப்பட்ட பின் அதன் அடிப்படையில் புதிய நிர்வாகத்துக்கான சபை அங்கத்தவர்கள் தெரிவு நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

க. தர்மலிங்கம்,
சு. சுப்பிரமணியம்,
இணைச் செயலாளர்.

ஆலய பரிபாலன சபை. [4817]

---

17 ஆவது பிறந்த தினத்தின் போது
## 9 ஆம் மாத வீர அஞ்சலி

**வீரவேங்கை பரிமளா**
கந்தசாமி சந்திரவானி (ஈசா)

தாயின் மடியில்: 02—05—1975
தமிழீழ மண்ணில்: 08—09—1991

எம் இதயத் தீப ஈசாவே!
உன் பிரிவை எங்களால் தாங்க முடியாதம்மா!
தாங்கவே முடியாது! வேதனைத் தீயில்
வெந்து துடிக்கும்;

- குடும்பத்தினர்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. [20816]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 11 — 1931



மறைவு: 15 — 05 — 1988

**தம்பிமுத்து சபாரெத்தினம்**
(கிராம சேவை அலுவலர்)

திதி: 02—05—1992

பாசத்தின் உறைவிடமே!
பண்பு நிறைந்த பேருருவே!
மாசற்ற மனமுள்ளோய் எங்கள் ஐயாவே!
அன்புக்கு அணிகலனே! ஆருயிர் இருப்பிடமே!
நாலாண்டு சென்றாலும் உங்கள் நினைவு அழியாது.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'லக்ஷ்மி மகால்',
சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய். [...]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**கனகம்மா நடராஜா**

தோற்றம்: 1911
மறைவு: 1991-04-14
திதி: 1992-05-02


என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்;
உறவினர்கள்.

நடராஜ் மன்றம்,
கே.கே.எஸ். வீதி,
இணுவில். [இ-1965]

---

ஸ்ரீ ராம ஜெயம்
## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 23 — 03 — 1947



மறைவு: 14 — 05 — 1991

அமரர்
**சிவகுரு ஜெகநாதன்**

திதி: 02—05—1992

அன்புமிகு துணைவனாய்
பாசமிகு தந்தையாய்
பாரினில் எல்லோருக்கும் இனியவராய்
வாழ்ந்து இறைவனடி சேர்ந்த தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்.

123/1, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். [20801]

---

Personal
New Science
Centre
Elilakam, Front Lane,
Jaffna.

கணித, உயிரியல், விஞ்ஞானப் பிரிவுக்குரிய
**92 A/L**
Paper Classes
பிரிவு — 2

[எமது வழமையான தனித்துவமான ஆசிரியர் குழு]

ஆரம்பம்:
03—05—1992 (ஞாயிறு)
[நேர அட்டவணை நிறுவனத்தில் பெறலாம்.]
[சி-2246]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வைரம் பாய்ச்சுக

கல்லும் முள்ளும், ஏற்றமும் இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதை ஊடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது—

இந்தப் பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைகளை எதிர்போடலாம். எமது பயணத்தில் சோர்வையும், களைப்பையும் ஏற்படுத்த இடையூறுகளை விளைவிக்கலாம்—

எந்தவித சவால்களை எதிர்கொண்ட போதும், எமது இலட்சியப் பயணத்தில் உறுதி தளரமாட்டோம் என வீரசபதம் செய்வோம்—

இவ்வாறு தமது நேற்றைய மே தினச் செய்தியில் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை கூராக்கிய, வலுவாக்கிய நாளில் இருந்து, சிங்கள அரசுகள் அதனை முறியடிக்கத் தம்மாலான சகல தந்திரோபாயங்களையும் கையாண்டு வருகின்றன. எல்லாத் துறைகளிலும், எல்லா வகைகளிலும் தமிழர்களின் மன உறுதியை, அசுரத்த ஆதாரமான ஆன்ம பலத்தை சேதப்படுத்திவிட முயலுகின்றன.

அதன் பொருட்டு பல வகைக் கொடுமைகளையும், அழுத்தங்களையும் மனித நீதிக்குப் புறம்பான அரக்கத்தனமான அக்கிரமங்களையும் அளவுக்கு அதிகமான அடக்குமுறைகளையும் அவை தமிழர் மீது எய்து வருகின்றன.

அந்த அக்கிரமங்களைத் தமிழ் மக்கள் தமது மன வலிமையினால், நெஞ்சுறுதியினால் எதிர்கொண்டு விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

எனினும், தமிழர்களின் மனோவலிமையைக் கண்டு சகிக்க முடியாத, தாங்கிக் கொள்ள முடியாத சிங்கள அரசு மேலும் கடுமையான அடக்குமுறைகளையும், அழுத்தங்களையும் தமிழர் மீது சுமத்தி விழ்த்திட நிச்சயம் முனையும்.

அதனால் தமிழர்கள் வெகு கவனமாகவும், அவதானமாகவும் இருக்க வேண்டும். எதையும் தாங்கும் இதயம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு உறுதியைத் தளரவிடாமல், சலனப்படாமல் தமது மனோவலிமையை மேலும் வைரம் பாய்ச்ச வேண்டும்.

என்ன இடர்வரினும் எது துயர் வரினும், எந்த அழிவும் இழப்பும் சோதித்த போதிலும், பிரளயமே வரப்போவதாக எச்சரிக்கை வந்தாலும் உரிமைகளை வென்றெடுப்போம் என்ற இலட்சியப் பயணத்தில் தமிழர்கள் சிறிதும் சறுக்கி விடலாகாது. ஒரு அடிதானும் காலைப் பின் வைக்கநினைக்கலாகாது.

தமிழர் தாயகத்தைப் பேணுவது; தமிழர் அரசை அமைப்பது என்பது தீர்க்கமான முடிவு. அதனை அடைவதற்கு உடையாத மனமும், தளராத செயலும், நீக்கமிலா நம்பிக்கையும், இடைவிடா முயற்சியும் தேவை. தமிழர்கள் இதனை மனதில் இருத்திச் செயற்பட்டால் வெற்றி அவர்களுக்கே!

## தமிழிசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம், மே 2

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும் தமிழிசை விழாவின் இன்றைய முதலாம் நாள் நிகழ்ச்சிகள் நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

தமிழிசை விழா இன்றைய நிகழ்ச்சி நிரல் வருமாறு:

**மங்கள இசை**

(மாலை 5-00 மணி முதல் 6-00 மணி வரை)

நாதஸ்வரம்: திருவாளர் ஏ. முருகானந்தம், கே. சிறீதரன், என். ஆர். கே. ரத்னகுமார், என். ஆர். கே. வாகீசன். தவில்: திருவாளர் என். ஆர். எஸ். ரவீந்திரன், என். ஆர். எஸ் சுதாகரன், என். முருகானந்தம், பி. குணம்

**தொடக்கவுரை**

திரு. புதுவை இரத்தினதுரை [பொறுப்பாளர்; விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்.]

**பாட்டு**

[6-00 மணி தொடக்கம் 7-00 மணி வரை]

செல்வி பரமேஸ்வரி கணேசன் — பாட்டு. திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின், திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்.

[7-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை]

திருவாளர் கே. இராமநாதன் — பாட்டு எஸ் சர்வேஸ்வரசர்மா — வயலின், எஸ். மகேந்திரன் — மிருதங்கம்.

**சிறப்பு விருந்தினர் உரை**

[8-00 மணி தொடக்கம் 8-30 மணி வரை]

திரு பரா [பொறுப்பாளர் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு], திரு இ. ஜெயராஜ் [அமைப்பாளர், கம்பன் கழகம்] ஸ்ரனி மாஸ்டர் [அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர், கடற் புலிகள்].

**பாட்டு**

[8-30 மணி தொடக்கம் 9-30 மணி வரை]

திருவாளர் எஸ். கணபதிப்பிள்ளை — பாட்டு, எஸ். கோபிதாஸ் — வயலின், எம். சிதம்பரநாதன் — மிருதங்கம், எஸ். நாகராசன் — கஞ்சிரா.

**நாதஸ்வரம்**

[9-30 மணி தொடக்கம் 10-30 மணி வரை]

நாதஸ்வரம்: திருவாளர் என். கே. பத்மநாதன், எஸ் எஸ். சிதம்பரநாதன், ஆர். கேதீஸ்வரன். தவில்; திருவாளர் ஆர். புண்ணியமூர்த்தி, ரி. உதயசங்கர், எஸ். முருகதாஸ். [இ]

### கொட்டகலை மேதின விழாவில்

## தமிழர் பிரச்சினைத் தீர்வு தொண்டமான் பிரஸ்தாபம்

கொழும்பு, மே 2

வடக்கு — கிழக்குப் பிரச்சினையை துப்பாக்கி முனையில் தீர்த்து வைக்க முடியாது; கலந்தாலோசனை, கருத்துடன் பாட்டின் அடிப்படையிலேயே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அமைச்சர் எஸ். தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவில் கொட்டகலையில் நேற்றுக் காலை மேதின விழாக் கூட்டம் நடத்தப்பட்டது.

அதற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு. தொண்டமான் முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி, இந்துமத விவகார ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் ஆகியோரும் அங்கு பேசினார்கள். [ஒ-எ]

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

## தமிழ் மக்கள் வீடுகளில் கொழும்பில் கொள்ளை

கொழும்பு. மே 2

கடந்த ஞாயிறன்று வெள்ளவத்தையில் உள்ள — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த —வேலை வாய்ப்பு முகவர் ஒருவரின் வீட்டில் துப்பாக்கி முனையில் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

84 ஆயிரம் ரூபா பணமும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளுமே கொள்ளையிடப்பட்டன.

அதேதினம் தெஹிவளையில் வசித்துவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் இருந்தும் துப்பாக்கி முனையில் 40 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## வவுனியா பகுதி வீதிகள் பெரும் செலவில் புனரமைப்பு

வவுனியாவில் பத்து வருடங்களுக்கு மேல் பராமரிக்கப்படாது இருந்த வீதிகள் கோடிக்கணக்கான ரூபா பணச் செலவில் செப்பனிடப்பட்டு, அகலமாக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா-யாழ் வீதி, வவுனியா - மன்னார் வீதி, வவுனியா - ஹொறவப் பொத்தானை வீதி, வெளிக்குளம்- பாவற்குள வீதி, நெலுக்குளம்- நேரிய குளம் வீதி ஆகியனவே 'ஏ' 'பி' தர நெடுஞ்சாலைகளாகப் புனரமைக்கப்படுகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ள கோடிக்கணக்கான நிதியில் இருந்தே இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதிகள் அகலப்படுத்தப்படுவதால் இந்தப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் குடிமனை வீடுகளும் அகற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## சுவிஸிலிருந்து கிட்டு வெளியேறினாராம்!

### அந்நாட்டு அமைச்சர் தகவல்

சூரிச், மே 2

சுவிட்சர்லாந்தில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] அங்கிருந்து தாமாகத் தான் வெளியேறினாரே தவிர, நாடு கடத்தப்படவில்லை.

—இப்படி சுவிஸ் அரசின் அகதிகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் பீற்றர் ஆர்தன்ஸ் சொன்னார்.

திரு. கிட்டு எங்கு புறப்பட்டுச் சென்றார் என்பது தெரியவில்லை. அவர் சுவிஸ் அரசியல் தஞ்சம் கோரவில்லை. ஆகவே அவருக்குத் தஞ்சம் அளிக்க சுவிஸ் அரசு மறுத்துவிட்டது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் சொன்னார்.

திரு கிட்டுவை நாடுகடத்தும்படி எவருமே எம்மைக் கேட்கவும் இல்லை. அவருக்கு எனத் தனிப் பாதுகாப்பு வசதி வழங்கப்படவுமில்லை. மறைமுகமாக வாழ அவருக்கு வசதி செய்து கொடுத்தது மட்டுமே அவருக்கு அளித்த ஒரே பாதுகாப்பு என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கிட்டுவின் விவகாரம் தனித்துவமானது என்றும் அவர் கூறினார். [ஒ-எ]

## மக்களின் உறுதியை...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட மக்கள் தமிழ் மண்ணில், மக்களின் அடித்தள நிலையை எடுத்தியம்பும் கருத்து மிக்க கோஷங்களை உணர்ச்சியுடன் முழக்கமிட்டனர். பலவித சுலோகங்களையும் ஏந்திச் சென்றனர்.

உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு சுய பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்கும் பேரணியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மே தினப் பேரணி நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் சந்தியில் இருந்து ஆரம்பமானது. விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேரணியை ஆரம்பித்து வைத்தார் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு பரா பேரணிக்குத் தலைமை வகித்து வந்தார்.

பேரணியின் முன்னே, அதற்குக் கட்டியங் கூறுவது போல கரகாட்டம் சென்று கொண்டிருந்தது.

**அணிவகுப்பு**

விடுதலைப் புலிகள் போராளிகள் ''பாண்ட்'' வாத்தியம் இசைத்து அணிவகுத்துச் செல்ல அவர்களைத் தொடர்ந்து தமிழீழ காவல் துறையினரும் தமது ''பாண்ட்'' இசையுடன் அணிவகுத்துச் சென்றனர் அவர்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரும் ''பாண்ட்'' இசை சகிதம் அணிவகுத்தனர்.

விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவின் ஊர்தி முதலில் சென்றது.

''மக்கள் புரட்சி வெடிக்கட்டும்'' என்று அந்த ஊர்திக்கு பெயரிட்டு, அமரர் திலீபன் கதிரையில் அமர்ந்து மக்களுக்கு அந்த வாசகத்தை கூறும் விதத்தில் ஊர்தி சித்திரிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கூட்டுறவாளர்களின் ஊர்திகள் சென்றன. உள்ளூர் மூலப் பொருள்களை, வளங்களை சித்திரிக்கும் வகையில் கூட்டுறவாளர்களின் ஊர்திகள் அமைந்திருந்தன.

ஆசிரியர்கள் கல்விப் பகுதி ஊழியர்கள், அதிகாரிகள், உள்ளூராட்சி அமைப்புகள், சுகாதார அமைப்புகள், செயலகத் திணைக்களங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், வங்கி ஊழியர்கள், ஆய்வு நிறுவனத்தினர், விவசாயிகள், மீனவர்கள், பனை வளம் சார்ந்த தொழிலாளர்கள் ஆகிய சகல தரப்பினரும் தமது ஊர்திகள் சகிதம் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்து மத குருமார், இடம் பெயர்ந்தோர் சார்பாகவும் ஊர்திகள் சென்றன.

**சகல பகுதிகளில் இருந்தும்**

பேரணியில் குடாநாட்டின் எல்லாப்பகுதிகளில் இருந்தும் வந்த மக்கள் தத்தம் ஊர்திகளின் பின்னே அணிநடையாகச் சென்றனர்.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் உரும்பராய் சந்தியிலும் —

வலிகாமம் பகுதி மக்கள் சுன்னாகத்திலும் —

வலிகாமம் மேற்கு, தீவகப் பகுதி மக்கள் உடுவில் வீதியிலும்—

தத்தமது ஊர்திகள் சகிதம் வந்து திரண்டிருந்தனர். அவர்கள் பின்னர் மருதனார்மடம் வந்து பேரணியில் சேர்ந்து கொண்டனர்.

மருதனார்மடத்தில் பி. ப. 2 மணிக்கு ஆரம்பித்த பேரணி நாச்சிமார் கோவிலை வந்தடைய இரவு 6 - 30 மணியாகியது. 200க்கு மேற்பட்ட ஊர்திகள் பேரணியில் பங்குபற்றின.

**பெருமளவு பெண்கள்**

பல்லாயிரக் கணக்கான உழைக்கும் மக்கள், உற்சாகத்துடன் பேரணியில் கலந்து கொள்ளக் காணப்பட்டனர்.

பேரணியில் ஆயிரக்கணக்கான பெண்களும் புத்தெழுச்சியுடன் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலையில் வான் ஊர்திகள் குடாநாட்டின் மேலே அடிக்கடி பறந்து ''வெருட்டிய'' போதிலும் மக்கள் உணர்ச்சி ததும்ப, துணிச்சலும், தீரமும் மிளிர ஆடியும் பாடியும் கோஷமிட்டும் கூட்ட மைதானத்தை அடைந்தனர்.

பேரணி வந்த வீதி நெடுகிலும், பல அமைப்புக்களும் நிறுவனங்களும் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து மக்களின் தாகசாந்தி தீர்த்தன.

சென். ஜோன்ஸ் முதலுதவிப் படையினரும், சாரணர்களினதும் முதலுதவி நிலையங்களும் இயங்கின.

நடமாடும் முதலுதவிச் சேவைப் பிரிவும் சேவையாற்றியது. அம்புலன்ஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

[அ-3-162-15-152-51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைச்சேனை பொலிஸார் மூவர் விளக்க மறியலில்

கொழும்பு, மே. 2

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் மூவர் கற்பழிப்பு குற்றச்சாட்டின் பேரில் இம்மாதம் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பொலிஸில் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் கான்ஸ்டபிள்கள் மூவரையும் வேலையில் இருந்து இடைநிறுத்தி, வாழைச்சேனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

## கடற்புலிகள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் கடற் புலிகள் பொறுப்பாளர் திரு மறவன் (சூசை).

நேற்றைய மேதின விழாவில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

கடல் வலுவுள்ள எந்த நாடும் தனது போராட்டத்தில் நிச்சயம் வெற்றி பெறும் என்ற கருத்து சர்வதேச ரீதியாக நிலவுகிறது. எமது போராட்டமும் வெற்றி பெற கடற்படை வலிமையைப் பெருக்க வேண்டும். அதற்காகவே தலைவர் பிரபாகரன் கடற்புலிகள் பிரிவை உருவாக்கினார்.

இன்று கடலோரப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் இருக்கின்றன. நாம் கடற் பகுதியைக் கைப்பற்றி கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால், நிச்சயம் எமது போராட்டம் வெற்றி பெறும்.

இன்று உலகில் எல்லா நாடுகளிலும் சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் பல வடிவங்களில் உருவாகியுள்ளன. அதற்கு ஏற்ப மேதினத்திலும் பாறுபட்ட அறைகூவல்கள் விடப்படுகின்றன.

அதே போன்று தமிழீழத்திலும் முன்னர் போல அல்லாமல் இன்று புதிய அறைகூவல் விடப்படுகிறது. எமது அரசியல் பொருளாதார மாற்றத்துக்காக இன்றைய நாளில் குரல் கொடுக்கிறோம் — என்றார். [அ-3-162]

## நேற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிப்பு!

★ தொழிலாளர்களே புலிகளின் கரத்தைப் பலப்படுத்துங்கள்; பெற்றுத்தருவார்கள் அவர்கள் தமிழீழத்தை.

★ எதிரிக்கு நாம் பொருளாதாரத்தடை போட அனைத்து உழைப்பாளிகளும் ஒன்று சேருவீர்!

★ பட்டினிச் சாவுக்கோ, குண்டுச் சாவுக்கோ நாம் அஞ்சமாட்டோம்.

★ விழித்திருப்போம்; இல்லையெனில் இருண்டு விடும்.

★ சிங்கள இனவாதம் ஒழியட்டும்; தமிழீழத் தாயகம் மலரட்டும்.

★ ஏர்முனையை ஏற்றிடுவோம் பார்முனையை வென்றெடுப்போம்.

★ அழிவுகளைத் தகர்க்க ஆயுதம் ஏந்திடுவோம்.

★ வேண்டாம் வேண்டாம் வெளிநாட்டு மோகம்.

[ஓ-152-111-3-15-162]

# ஒடுக்கப்பட்ட மக்க....

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

றிப் பாதையில் செல்வதாலேயே, தென் இலங்கையில் மனமாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. பௌத்த பிக்குகள் இங்குவந்து எம்முடன் பேச்சு நடத்தியதும் இந்த மனமாற்றத்தின் விளைவுதான்.

வியட்நாமில் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக அமெரிக்கா வாபஸ் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே நிலை தென் இலங்கைக்கும் ஏற்படும் என்பதை இங்கு வந்த பௌத்த பிக்குகளிடம் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள மனமாற்றம் சிங்கள தொழிலாளர் மத்தியிலும் ஏற்படவேண்டும்— என்று கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேசுகையில் கூறியதாவது:—

4500 மாவீரர்களின் தியாகத்தால் தமிழர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். உலகில் உள்ள விடுதலை இயக்கங்களுக்கு வழிகாட்டியாக விடுதலைப் புலிகள் விளங்குகிறார்கள். ஒரே தலைமையின் ஒரே குரலில் நாம் போராடுகிறோம்

இன்று ஏழைத் தொழிலாளர்களுடன் எமது போராளிகள் இணைந்து நிற்கிறார்கள். அவர்களின் உரிமைக்காகவும் நாம் போராடுகிறோம்— என்றார்.

யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராசா பேசுகையில்—

மணலாறைப் பிரித்து விடுவோம், யாழ்ப்பாணத்தைப் பிடித்து விடுவோம் என்று ஸ்ரீலங்கா இராணுவம் கனவு கண்டுகொண்டிருக்கிறது. இன்றைய மேதினத்தில் திரண்டிருக்கும் மக்களைப் பார்த்தால் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பதை எதிரி உணர்வான்— என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெயா பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய போராட்டம் புலிகளுடைய போராட்டம்; மக்களுடைய போராட்டமல்ல என்று அரசு உலகுக்கு உணர்த்த முயன்று வருகிறது. ஆனால் இன்றைய மேதின விழா அதனை முறியடித்து விட்டது. எமது மன உறுதியையும் போராட்ட உணர்வுகளையும் இராணுவ, பொருளாதார அடக்குமுறைகளால் ஒடுக்கிவிடமுடியாது என்பதை மேதின விழா நிரூபிக்கிறது— என்றார்.

மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா, தொழிலாளர் சார்பில் ய. அன்ரனி. நா. அருந்தவபாலன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

[அ-3-162-111]

## இன்று

யாழ்ப்பாணம், மே. 2

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ''டொனால்ட் கணேஷ் குமார்'' கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ் பற்றிஷியன் அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி மோதும்.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதும்.

இரு ஆட்டங்களும் இன்று காலை 9 மணிக்கு ஏக காலத்தில் ஆரம்பமாகும்

இந்த ஆட்டங்கள் 50 ஓவர்களைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

[உ]

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ்ப்பாணம் பாரதி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். அன்ரனீஸ் அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் இடம்பெறும்.

★ ★ ★

மிருசுவில் மகளிர் இட்டகர்க்கா இந்து இளைஞர் மன்றத்தின் ஆண்டு நிறைவு விழா இன்று மாலை 6 மணிக்கு விநாயகர் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம அதிதியாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் சிறப்பு அதிதிகளாக இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா, சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திரு. மு. திருநாவுக்கரசு ஆகியோர் பங்குபற்றுவர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ-117)

## உற்சவம்

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. 11 ஆம் திகதி சங்காபிஷேகமும், அடுத்த நாள் திருக்குளிர்த்தி அபிஷேகமும் நடைபெறும். [உ]

## எஞ்சிய...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

வளித்தார்.

விசாரணையின் நடுவில் எதிரிகளில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான காமினி திஸநாயக்கா விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே.

குற்றங்களை நிரூபிக்க அரச தரப்பு தவறிவிட்டது என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். [இ-எ]

## நல்லூரில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

''தமிழிசை விழா''வில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழீழக் கலைஞர்கள் பங்குகேற்க உள்ளனர்.

சங்க காலத்திற்குப் பின்னர் எமது தலைவர் பிரபாகரன் காலத்திலேயே தமிழும் தமிழோடிணைந்த கலைகளும் வளர்ச்சி காண்கின்றன என்ற உண்மையை இந்த விழாவும் உறுதி செய்யும் — என்று விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

(நிகழ்ச்சி விவரம் 5 ஆம் பக்கத்தில்)

# பிரேமாவின் கூற்றுக்கு இந்தியா கடும் ஆட்சேபம்

இந்திய அமைதிகாக்கும் படையை ஓர் ஆக்கிரமிப்பு இராணுவம் என்ற கருத்துப் பட ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டதாகச் சொல்லப் படுவது குறித்து இந்திய அரசாங்கம் இலங்கையிடம் வன்மையாக ஆட்சேபந் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. என். என். ஜா இந்தியாவின் ஆட்சேபக் குறிப்பு ஒன்றை இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு பேர்னாட் திலகரத்னாவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் கூற்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவும் வழமையான நல்லுறவுகளுக்கு இசைந்ததாக அமையவில்லை என்று இந்த ஆட்சேபக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-எ-த)

## மரண அறிவித்தல்கள்

### திரு. வயித்தியாம்பிள்ளை சவரிமுத்து

சில்லாலையைச் சேர்ந்த வயித்தியாம்பிள்ளை சவரிமுத்து நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற சவரிமுத்து மரியம்மாவின் அன்புக் கணவரும் எமிலியானுஸ், இராஜேஸ்வரி [மலர்], லூர்தம்மா [பூமணி], ஜெபசீலிமலா, பற்றிமாவர்ணம் [ஜேர்மனி], சூசைப்பிள்ளைதுரை [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி, காலஞ்சென்ற சிங்கராயர் மற்றும் அன்ரனி, மனோகரன், செல்வராஜாசூரி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், ரொனி [பிரான்ஸ்], ஜெபேத் [ஜேர்மனி], ஜினா, கவிதா, நிஷாந்தன், மீரா, நிரோஸ் [ஜேர்மனி], தயன் [ஜேர்மனி], ரிவானி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இன்று [02-05-92] மாலை மூன்று மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் கதிரைமாதா கோவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு வழிபாட்டிற்குப் பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:

நல்லாயன் வீதி, சில்லாலை. — ச. எமிலியானுஸ் [எமில்]

[20820]

### முதலியார் ஆறுமுகம் (அந்தோனிப்பிள்ளை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முதலியார் ஆறுமுகம் [அந்தோனிப்பிள்ளை) 27-4-92 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் நேசம்மாவின் அன்புக் கணவரும், சந்தையா, முத்தையா, நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நித்தியானந்தம் [பிரான்ஸ்], பாலச்சந்திரன் [பிரான்ஸ்], ராசேஸ்வரன் [கனடா], சரோசினிதேவி, ரஞ்சினிதேவி, சுசீலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானப்பிரகாசதாஸ், பாலச்சந்திரன், நாகேஸ்வரி, ஈசான், கௌரி ஆகியோரின் மாமனாரும், சுஜா, சுதன், சுஜன், சுகில், நிமால், வசந்தி, ரமேஸ், நிருபா, நிமஜா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

4816 — ச. இராசையா

### சிதம்பரி வைத்திலிங்கம்

சிறுவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரி வைத்திலிங்கம் (நேரக் காப்பாளர் இ. போ. ச. சாலை கிளிநொச்சி) காலமானார். இவர் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் சுமதி, றஜனி, லதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (02-05-92) இன்று பிற்பகல் 2 மணிக்கு சிறுவிளான் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சிறுவிளான். — சி. சிவம்.

[20821]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-5-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org